# இராசிபுரம் நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு

2025–ஆம் வருடம் டிசம்பர் மாதம் 05–ஆம் தேதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அது சமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி }
நாள் 28.11.2025

தலைவர்,
நகர் மன்றம்

## பொருள்கள்

(1) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான புதியதாக கட்டப்பட்டுள்ள தினசரி மார்கெட் 58 கடைகளுக்கு 01.04.2024–ஆம் தேதி முதல் மூன்றாண்டு தொகுப்பில் மாத வாடகை அடிப்படையில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டுள்ள நிலையில், 16 கடைகள் ஏலம் கோர முன்வந்தனர். அதில் 8 கடைகளுக்கு மட்டும் வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் 8 கடைகளில் 2 கடைகள் நகராட்சி வசம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. தற்போது 6 கடைகள் மட்டுமே நடத்தப்பட்டு வரும் நிலையில், மீதமுள்ள 52 கடைகள் பலமுறை ஏலம் கோரியும் யாரும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர முன்வரவில்லை.

எனவே, மேற்காணும் தினசரி மார்கெட்டிலுள்ள 58 கடைகளுக்கும் ஆண்டுக் குத்தகை இனத்தில் மாற்றம் செய்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் குத்தகைக்குவிட மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(2023/23/அ2)

**தீர்மானம் எண். 770**

அனுமதிக்கப்படுகிறது.

(2) இராசிபுரம் நகராட்சியில் பணிபுரிந்த திரு த. அகிலன் மற்றும் 6 நபர்களால் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட நீதிப் பேராணை எண்கள். 33489, 33490, 32642, 33491, 32529, 32530 மற்றும் 32531/2017 தொடர்பாக 06.06.2018–இல் நீதிப்பேராணை பெறப்பட்டுள்ளது.

மேற்காணும் நீதிப்பேராணையை WA NOs. 458, 463, 464, 465, 469, 475 மற்றும் 510/2019–இல் மேல் முறையீடு செய்யப்பட்டு பார்வை 1–இல் காணும் நீதிப்பேராணை மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது.

மேலும், மேற்காணும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் உச்சநீதி மன்றத்தில் சிறப்பு விடுப்பு மனு (SLP) (Dairy Number 52004/2024) தாக்கல் செய்யப்பட்டது.

மேற்காண் சிறப்பு விடுப்பு மனு பார்வை 2–இல் காணும் நீதிப்பேராணை மூலம் தள்ளுபடி செய்யப்பட்டு ஆணை பெறப்பட்டுள்ளது.

தற்போது, மேற்காண் வழக்கினை எதிர்த்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கு (CONT.P.No. 2491, 2492. 2493 & 2493/2025) தொடரப்பட்ட நிலையில் நகராட்சியின் சார்பாக வழக்காட வழக்கறிஞர் திரு பி. ஆனந்த்குமார் அவர்களுக்கு வழக்குக் கட்டணம் ரூ. 30000/– வழங்க நகர் மன்றம் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

(சி1/2932/17)

**தீர்மானம் எண். 771**

அனுமதிக்கப்படுகிறது.

(3) இந்நகராட்சிப் பகுதிகளில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளுதல் மற்றும் வெறிநோய் தடுப்பூசி செலுத்தும் பணிகளை மேற்கொள்ள ஏற்படும் உத்தேச செலவினம் ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/2947/25)

**தீர்மானம் எண். 772**

அனுமதிக்கப்படுகிறது.

(4) நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், பட்டணம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் கடித ந.க.எண். 356/2025, நாள் 21.08.2025 மற்றும் பட்டணம் பேரூராட்சி மன்ற தீர்மான எண். 156(10), நாள் 14.08.2025 ஆகியவற்றின்படி பட்டணம் பேரூராட்சி 13 வார்டு, மேட்டாங்காடு தெருவில் அமைந்துள்ள கணபதி நகர் மனைப்பிரிவானது இராசிபுரம் நகராட்சியின் இருப்பகுதியின் எல்லையின் மையப்பகுதியில் அமைந்துள்ளதால் அப்பகுதிக்கு தேவையான குடிநீர் வசதி மற்றும் தெரு மின்விளக்கு வசதிகளை இராசிபுரம் நகராட்சி மூலம் செய்து கொடுக்குமாறும் மற்றும் இவ்வலுவலகத்திலிருந்து பணிக்கான செலவினத் தொகை பேரூராட்சியின் பொது நிதியிலிருந்து வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்டப் பணியினை இராசிபுரம் நகராட்சியின் மூலம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) இதற்கான செலவினம் பட்டணம் பேரூராட்சி இந்நகராட்சியில் செலுத்திய பின் பணி செய்யலாம்.

இ) குடிநீர் கட்டணத் தொகை நிர்ணயம் செய்து, நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களிடம் அனுமதி பெற்று பணி செய்யலாம்.

(இ2/2493/25)

**தீர்மானம் எண். 773**

அனுமதிக்கப்படுகிறது.

(5) இராசிபுரம் நகராட்சியிலுள்ள கீழ்கண்ட ஈப்பு வாகனங்களுக்கு 2025-2026 ஆம் ஆண்டிற்கான வாகன காப்பீடு புதுப்பிக்க தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்

விதிகள், 2023 விதி எண். 235(3)–படி செலவினம் மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வண்டி எண். | செலவினத் தொகை | நிதி |
|---|---|---|---|
| 1 | TN28CZ6001(நகர் மன்ற தலைவர்) | ரூ. 35,629 | வருவாய் நிதி |
| 2 | TN28CZ6111(ஆணையாளர்) | ரூ. 20,754 | வருவாய் நிதி |
| 3 | TN28CZ6222(பொறியாளர்) | ரூ. 20,754 | குடிநீர் நிதி |

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

(இ2/2492/25)

**தீர்மானம் எண். 774**

பதிவு செய்யப்படுகிறது.

(6) இராசிபுரம் நகராட்சியிலுள்ள கீழ்கண்ட குடிநீர் லாரிகளுக்கு 2025-2026 ஆம் ஆண்டிற்கான வாகன காப்பீடு புதுப்பிக்க தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 விதி எண். 235(3)–படி செலவினம் மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வண்டி எண். | செலவினத் தொகை | நிதி |
|---|---|---|---|
| 1 | TN28BZ9021(6000 லி.) | ரூ. 31,492 | குடிநீர் நிதி |
| 2 | TN28BZ8975(12000 லி.) | ரூ. 41,509 | குடிநீர் நிதி |

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் பதிவு செய்யலாம்.

(இ2/2492/25)

**தீர்மானம் எண். 775**

பதிவு செய்யப்படுகிறது.

(7) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளில் நச்சுத்தொட்டியை (Septic Tank) சுத்தம் செய்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு (STP) கொண்டு வந்து விடுவதோடு இதனடிப்படையில் மலக்கசடுகளை சேகரிப்பதற்காக தூய்மை இந்தியா திட்டம் நகர்புறம் 2.0 2022 – 2023 கழிவுநீர் அகற்றும் வாகனம் ஒன்று வாங்கப்பட்டுள்ளது. இந்த வாகனத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், அதற்கான வாடகை ஒரு நடைக்கு ரூ.1900/- (ஓராயிரத்து தொள்ளாயிரம் ரூபாய் மட்டும் ) வீதம் நிர்ணயம் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/3972/23)

**தீர்மானம் எண். 776**

அனுமதிக்கப்படுகிறது.

**( 8 )** இராசிபுரம் நகராட்சி பொதுப்பிரிவிற்குத் தேவையான பதிவேடுகள், வருவாய் பிரிவிற்கு பெயர் மாற்றம் பதிவேடு, படிவங்கள், காசாளர் பிரிவிற்கு படிவங்கள், சொத்துவரி, குடிநீர் கட்டண இரசீதுகள், பொறியியல் பிரிவிற்கு அளவு புத்தகம் மற்றும் பதிவேடுகள், பொது சுகாதாரப் பிரிவிற்கான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் மற்றும் அனைத்துப் பிரிவிற்கும் A4, FS பேப்பர் மற்றும் எழுதுபொருட்கள் ஆகியன **2025–26**–ற்கு வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. **09.00** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2880/25/பி3)

**தீர்மானம் எண். 777**

அனுமதிக்கப்படுகிறது.

**( 9 )** இராசிபுரம் நகராட்சியில் IUDM **2013 – 2014** திட்டத்தில் பாதாள சாக்கடை அமைக்க ரூ. **55.42** கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு இப்பணி **2020 – 2021**–ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணியில் **10000** வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்க மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பணி நடைபெறும்போது **7024** இணைப்புகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தில் **60.89** கி.மீ. நீளத்திற்கு புதை வடிகால் குழாய்கள், **2127** எண்ணிக்கை இயந்திர குழிகள் (Machine Holes) 6 எண்ணிக்கை கழிவு நீரேற்று நிலையங்கள், **1** எண்ணிக்கை பிரதான கழிவு நீரேற்று நிலையம், **6.96** MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவை அமைக்கப்பட்டு **01.02.2021** முதல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவர்களின் பராமரிப்பு காலம் **31.01.2026** அன்று முடிவதால் அதன் பின்னர் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கு வெளிக்கொணர்வு முகமை மூலம் ஆட்கள் அமர்த்திக் கொள்ள நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். **21787/2021**/EA2, நாள் **02.10.2021**–இன்படி ஓர் ஆண்டிற்கு ரூ. **1,16,18,381/–** செலவினம் ஏற்படுகிறது. எனவே **01.02.2026** முதல் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஆட்களை அமர்த்திக் கொள்ளவும், அதற்கான மேற்கண்ட செலவின தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு உரிய கருத்துரு அனுப்பி அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/3814/11

**தீர்மானம் எண். 778**

அனுமதிக்கப்படுகிறது.

( 10 ) இராசிபுரம் நகராட்சிக்கு தற்போது நான்கு நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மக்களின் தினசரி இதர தண்ணீர் தேவைக்கு உப்புநீர் அத்தியாவசியமாக உள்ளது. வார்டு 27–இல் உள்ள மூலக்கிணற்றிலிருந்து உப்புநீர் முறையே வார்டு எண்கள். 14, 16, 22, 23, 24, 8 மற்றும் 13 ஆகியவற்றிற்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது கணபதி விலாஸ் ரைஸ் மில் தெருவிலுள்ள HTPE குழாய்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே இதனை அகற்றிவிட்டு மாற்று ஏற்பாடாக புதிய 65mm GI PIPE களை 160 மீட்டர் நீளத்திற்கு கான்கீரிட் சாலை சேதமடையாமல் சாலையின் ஓரத்தில் அமைப்பதற்கும், பழுதடைந்த கான்கீரிட் சாலையின் ஓரங்களை மீண்டும் சீர் செய்வதற்கும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(1669/25/இ2)

**தீர்மானம் எண். 779**

அனுமதிக்கப்படுகிறது.

( 11 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 14 முதல் 27 வரையுள்ள ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் திறந்த வெளிக்கிணறுகளில் உள்ள மின்மோட்டார்களிலும் மின் கேபிள்களிலும் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டியுள்ளது. பொது மக்களின் குடிநீர் பயன்பாடு தவிர பிற உபயோகங்களுக்கு பயன்படும் தண்ணீரை பொதுமக்களின் வேண்டுகோளின்படி வழங்க அவசியம் ஏற்படுகிறது. எனவே வார்டு எண். 14 முதல் 27–இல் உள்ள 52 எண்ணிக்கை மின் மோட்டார்களை பழுது பார்க்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிக் கோரி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 5,00,000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்கண்டப் பணியை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/2990/25)

**தீர்மானம் எண். 780**

அனுமதிக்கப்படுகிறது.

( 12 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் TN 28 AT 4555 2012–ஆம் ஆண்டு வாங்கப்பட்டு இது நாளது வரை 3,89,000 கி.மீ. இயங்கியுள்ளதாகவும் மேலும் தற்போது இதற்கான பராமரிப்பு செலவு மற்றும் புதியதாக டயர் மாற்ற ரூ. 1,25,000/– ஆகும். மேற்படி வாகனம் இலக்கினைவிட அதிக தூரம் இயக்கப்பட்டுள்ளதால் ஆண்டு பராமரிப்பு செலவினம் அதிகமாக உள்ளது. எனவே மேற்படி வாகனத்தை கழிவு செய்து பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(1898/25/இ2)

**தீர்மானம் எண். 781**

அனுமதிக்கப்படுகிறது.

(13) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 22, 25 மற்றும் 27 அரசமர சந்து, கோனேரிப்பட்டி மாரியம்மன் கோவில் தெரு, கோனேரிப்பட்டி காட்டுக்கொட்டாய் ஆகிய பகுதியில் புதிய உப்புநீர் விநியோகக் குழாய்களை மாற்றுதல் பணிக்கு நகர் மன்றத் தீர்மான எண். 720 நாள் 28.05.2025-இல் அனுமதி வழங்கியுள்ளதன்பேரில் ரூ. 2,30,000/- என்ற மதிப்பீட்டிற்கு 18.07.2025-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | M/S J.P Construction | -0.12% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S P&B Enterprises | 1.10% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டைவிடக் குறைவான -0.12% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. J.P Construction அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(1058/25/இ2)

**தீர்மானம் எண். 782**

அனுமதிக்கப்படுகிறது.

(14) இராசிபுரம் நகராட்சியில் வார்டு எண். 14 முதல் 27 வரையுள்ள பகுதியிலுள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் ஆழ்துளைக்கிணற்றில் இருந்து செல்லும் உப்புநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சரிசெய்தல் பணிக்கு நகர் மன்றத் தீர்மான எண். 723 நாள் 28.05.2025-இல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் ரூ. 5,00,000/- என்ற மதிப்பீட்டிற்கு 18.07.2025-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | M/S J.P Construction | -0.11% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/S P&B Enterprises | 0.19% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விடக் குறைவான -0.11% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S J.P. Construction அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(802/25/இ2)

**தீர்மானம் எண். 783**

அனுமதிக்கப்படுகிறது.

( 15 ) இராசிபுரம் நகராட்சியில் வார்டு எண். 2, 3, 5, 7,19, 26 மற்றும் 15 ஆகிய வார்டுகளில் உப்பு நீர் பைப் லைன் நீட்டிப்பு செய்தல் பணிக்கு நகர் மன்றத் தீர்மான எண். 716 நாள் 28.05.2025-இல் அனுமதி வழங்கியுள்ளதன்பேரில் ரூ. 7,20,000/- என்ற மதிப்பீட்டிற்கு 18.07.2025-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | திரு.N. செல்லப்பன் ஒப்பந்ததாரர், இராசிபுரம் | -0.04% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | R.ஷாகிதா, ஒப்பந்ததாரர், இராசிபுரம் | 0.49% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பணிக்கு மதிப்பீட்டைவிடக் குறைவான -0.04% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு N.செல்லப்பன் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(0137/25/இ2)

**தீர்மானம் எண். 784**

அனுமதிக்கப்படுகிறது.

( 16 ) இராசிபுரம் நகராட்சியிலுள்ள பாதாள சாக்கடைத் திட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இணைய வழி கண்காணிப்பு அமைப்பு (OCEMS) பணி செய்ய இவ்வலுவலக செயல்முறையில் R.L. Technologies அவர்களுக்கு பணியாணை வழங்கப்பட்டு 11.12.2023–இல் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால் சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படும் கழிவுநீர் நிர்ணயக்கப்பட்ட அளவைவிட கூடுதலாக உள்ளது. மேலும் இது தொடர்பாக நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பாதாள சாக்கடைத் திட்ட கோட்டம், இராசிபுரம் அவர்களின் கடிதத்தில் OCEMSன் Reading Calibration தவறாக காட்டுவதால் தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியத்தின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்படுவதற்கான ஒப்புதல் (CTO) பெற இயலவில்லை என தெரிவிக்கப்பட்டது. எனவே அளவுமானி ஆண்டு பராமரிப்பு பணி செய்ய தோராயமாக செலவினம் ரூ. 11.00 இலட்சம் ஆகும். மேலும் குடிநீர் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.

(2241/21/இ2)

**தீர்மானம் எண். 785**

அனுமதிக்கப்படுகிறது.

( 17 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட 2, 22, 23, 25 மற்றும் 17 வார்டுகளில் திருசிற்றம்பலம் தெரு, பெருமாள் கோவில் தெரு, மங்களம் இராமலிங்கம் தெரு, கோனேரிப்பட்டி எக்ஸ்டென்சன் நெ. 1, விநாயகம் தெரு உப்புநீர் மற்றும் குடிநீர் பைப்லைன் நீட்டிப்பு செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 3.20 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2524/25/இ2)

**தீர்மானம் எண். 786**

அனுமதிக்கப்படுகிறது.

( 18 ) இராசிபுரம் நகராட்சி பழைய பேருந்து நிலைய பகுதியில் தற்போது வணிக வளாகம் கட்டும் பணிகள் நடைப்பெற்று வருகிறது. இப்பணிக்காக இங்குள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து செல்லும் குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் வால்வு தொட்டிகள் ஆகியவை மாற்றியமைக்கும் பொழுது சுற்றுச்சுவர்கள் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. இச்சுற்றுசுவர் கட்டப்பட்டு 30 ஆண்டுகளுக்கும் மேலாகிறது. மேலும் தற்போது வணிக வளாகம் கட்டப்படுவதால் பொதுமக்கள் மேல்நிலை தொட்டி பகுதிக்கு நுழையாதவாறு சுற்றுச்சுவர் கட்ட வேண்டியது அவசியமாகிறது. எனவே பழைய பேருந்து நிலைய நீர்தேக்கத் தொட்டிக்கு சுற்றுச்சுவர் கட்டவும், இதரப் பணிகள் மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 9.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை 2025 - 26 குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2898/25/இ1)

**தீர்மானம் எண். 787**

அனுமதிக்கப்படுகிறது.

( 19 ) இராசிபுரம் நகராட்சியிலுள்ள பாதாள சாக்கடைத் திட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இணைய வழி கண்காணிப்பு அமைப்பு (OCEMS) பணி செய்ய இவ்வலுவலக செயல்முறையில் R.L. Technologies அவர்களுக்கு பணியாணை வழங்கப்பட்டு 11.12.2023– இல் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால் சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படும் கழிவுநீர் நிர்ணயக்கப்பட்ட அளவைவிட கூடுதலாக உள்ளது. மேலும் இது தொடர்பாக நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பாதாள சாக்கடைத் திட்ட கோட்டம், இராசிபுரம் அவர்களின் கடிதத்தில் OCEMSன் Reading Calibration தவறாக காட்டுவதால் தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியத்தின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்படுவதற்கான ஒப்புதல் (CTO) பெற இயலவில்லை என தெரிவிக்கப்பட்டது. எனவே அளவுமானி குறைபாடுகள் சரிசெய்ய உத்தேச செலவினம் ரூ. 5.31 இலட்சம் ஆகும். மேலும் குடிநீர் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் நிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.

(2241/21/இ2)

**தீர்மானம் எண். 788**

அனுமதிக்கப்படுகிறது.

20 ) நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு ஒரு வேளை உணவு வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்த முடிவு செய்யப்பட்டு அதற்கான ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ள அரசால் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க 21.11.2025 அன்று பொது ஒப்பந்தப்புள்ளி நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களால்

கோரப்பட்டது. இத்திட்டத்தில் இராசிபுரம் நகராட்சிக்கு கீழ்கண்டவாறு தூய்மைப் பணியாளர்கள் கணக்கீடப்பட்டு அவர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு உணவு வழங்கும் செலவினம் ரூ.1,09,18,547.00 கணக்கீடப்பட்டுள்ளது.

மொத்த தூய்மைப் பணியாளர்கள் – 198

ஓர் ஆண்டுக்கு செலவினம் – ரூ. 34,63,459.00

மூன்று ஆண்டுக்கு செலவினம் – ரூ. 1,09,18,547.00

இத்திட்டத்தை செயல்படுத்த அரசாணை (4ப) எண். 56, நாள் 21.11.2025–இன்படி செலவின தொகையை நகராட்சி சொந்த நிதியில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட விவரப்படி தூய்மைப் பணியாளர்களுக்கு ஒரு வேளை உணவு வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தவும், அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

2930/25/இ1)

**தீர்மானம் எண். 789**

அனுமதிக்கப்படுகிறது.

(21) இராசிபுரம் நகராட்சியில் பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் (2025 – 26) கீழ் இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 17 வரதன் தெருவில் உள்ள பொது சுகாதார வளாகத்திற்கு சுற்றுசுவர் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாமக்கல் அவர்களின் செயல்முறை ந.க.எண். 467/2025/அ4, நாள் 31.10.2025-இன்படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் ரூ. 4,50,000/- என்ற மதிப்பீட்டிற்கு 21.11.2025-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1 | இராசிபுரம் நகராட்சியில் வார்டு எண். 17 வரதன் தெருவில் உள்ள பொது சுகாதார வளாகத்திற்கு சுற்றுசுவர் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் | 4.50 | 1. ஒப்பந்ததாரர் திரு R.பிரகாசம் - 0.12% மதிப்பீட்டை விட அதிகம்<br>2. விருத்தச்சாலம் இன்ஜினியரிங் மற்றும் கன்ஸ்ட்ரக்ஷன் சர்வீஸ் இன்ட்ரியல் கோ. ஆப்ரடிவ் சொஸைட்டி -77.31% மதிப்பீட்டை விட அதிகம்<br>3. ஒப்பந்ததாரர் திரு R.பெரியசாமி -0.02% மதிப்பீட்டை விட குறைவு |

திட்டப்பணி ஆகையால் வ.எண். 3 குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு R.பெரியசாமி அவர்களுக்கு பணியின் அவசியம் கருதி பணியாணை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியானை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(1129/23/இ1)**

**தீர்மானம் எண். 790**

அனுமதிக்கப்படுகிறது.

(22) இராசிபுரம் நகராட்சியில் உள்ள அனைத்து தார் மற்றும் சிமெண்ட் சாலைகளிலும் ஏற்பட்ட சாலை பழுதுகள் மற்றும் புதிய குடிநீர் இணைப்பு, குடிநீர் குழாய் பழுதை சரி செய்தல், புதிய பாதாள சாக்கடை இணைப்பு ஆகியப் பணிகள் மேற்கொள்ளும் போது ஏற்பட்ட பணிகள் மற்றும் குழிகள் ஆகியவற்றை சரிசெய்தல் பணிக்கு நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்கள் ரூ. **10.00** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் இவ்வலுவலகத்தில் **10.11.2025** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மன்ற அனுமதியை எதிர்நோக்கி மன்றத் தலைவர் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(2830/25/இ1)**

**தீர்மானம் எண். 791**

அனுமதிக்கப்படுகிறது.

(23) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். **27–**இல் செட்டியண்ணன் தெருவில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு செல்லும் போர்வேல் மின்மோட்டாரின் சர்வீஸ் ஒயர்கள், பீஸ் கேரியர் ஆகியவை பழுது ஏற்பட்டதால் கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி செய்து தர இயலவில்லை. இதனால் பொது கழிப்பிடத்தை உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் பொது மக்கள் சிரமத்திற்குள்ளாகின்றனர். எனவே அவசரம் அவசியம் கருதி மேற்கண்டப் பழுதை சரி செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. **10000**- ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி செய்தமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை 2025 - 26 குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**( 2899/25/இ1)**

**தீர்மானம் எண். 792**

அனுமதிக்கப்படுகிறது.

**( 24 )** இராசிபுரம் நகராட்சி பாரதிதாசன்சாலை, நகராட்சி நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் அப்பள்ளியின் நடைப்பாதைக்கு பேவர் பிளாக் அமைக்கவும், புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை சுற்றிலும் மழைநீர் தேங்காதவாறு சிமெண்ட் தளம் அமைக்கவும் மேலும் இதர அடிப்படை வசதி செய்து தருமாறு கடிதத்தில் தெரிவித்துள்ளார். அதன்படி இப்பள்ளியில் மேற்கண்டப் பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. **7.90** இலட்சத்துக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையை 2025 - 26 நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(2831/25/இ1)**

**தீர்மானம் எண். 793**

அனுமதிக்கப்படுகிறது.

( 25 ) இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் வார்டு– A, பிளாக்–**02**, நகரளவை எண். **6/7, 8** மற்றும் **9**-இல் **0.25** ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க மனுதாரர் திரு ஆர். குமரேசன், **40/37**, காட்டுக்கொட்டகை, கட்டனாச்சம்பட்டி பிளாக் **–2**, இராசிபுரம் **–637 408** என்பவருக்கு **0.25** ஏக்கர் பரப்புள்ள இடத்தில் **4** குடியிருப்பு மனைகள் உள்ளடக்கிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் மனைப்பிரிவு வரைபட எண். SWP/DTCP/NAMAKKAL/ LAYOUT APPROVAL NO. NO.181/2025-இல், ROC NO.NKL/ NRHLUY14/ 48061/ 2025/ TCP, நாள் 23.07.2025-இல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவிற்கு, பொறியியல் பிரிவின் **10.11.2025** ஆம் தேதிய குறிப்பில் மனைப்பிரிவிற்கு அடிப்படை வசதிகளான அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திலுள்ள **9.00** மீ. அகலம் உள்ள பிரதான சாலையில் **6.00** மீ. அகலம் தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இதில் **0.15** மீ. Thick GSB, 0.15 மீ. Thick WMM, 0.05 மீ. Thick DBM, 0.03 மீ. Thick BC அமைக்கப்பட்டுள்ளது. சாலையின் இருபுறமும் சிமெண்ட் கான்கீரிட் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டு பிரதான சாலையில் உள்ள வடிகாலில் இணைக்கப்பட்டுள்ளது. (Side wall 20cm Thick PCC 1:3:6 mix concrete 60 cm height, 30 cm vent) சாலையின் **90** மிமீ. PVC குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைக்கப்பட்டு பிரதான குழாயில் இணைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சாலையின் **2** எண்ணிக்கை சோலார் மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதி பாதாள சாக்கடை திட்டத்தில் மேற்கொள்ள வழிவகை செய்யப்படாததால் இங்கு பாதாள சாக்கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என பொறியியல் பிரிவில் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட பொறியியல் பிரிவு குறிப்பின்படி மூன்றாம் தரப்பில் பணிகளை ஆய்வு செய்து சான்று வழங்க கோரியதின் அடிப்படையில் முதல்வர், ஞானமணி பொறியியல் கல்லூரி, பாச்சல், நாமக்கல் மாவட்டம் அவர்களை இவ்வலுவலகத்திலிருந்து கோரப்பட்டதின் அடிப்படையில், மேற்கண்ட கல்லூரியின் நேராய்வின்படி, மேற்கண்ட மனைப்பிரிவில் அடிப்படை வசதிகள் தார் சாலை, சாலையின் இருபுறமும் மழைநீர் வடிகால் வசதி, சாலையில் சோலார் விளக்குகள் வசதி, சாலையில் **90** mm PVC குடிநீர் பகிர்மான குழாய் ஆகிய அடிப்படை வசதிகள்

நல்லமுறையில் அமைக்கப்பட்டுள்ளதாக, சரிபார்த்து தங்களது Letter No:74/2025/GCT, Dated 22.11.2025 கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள்.

மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்க உரிய கட்டணம் நகரமைப்பு மற்றும் பொறியியல் பிரிவின் குறிப்பின்படி மொத்தம் ரூ.**1,18,126/–**ஐ (மனுதாரர் இந்நகராட்சியில் இதரக் கட்டணமாக ரூ. **2000/–**ஐ சலான் எண். **053/01/3/25–26/0007749**, ரூ. **16,126/–**ஐ சலான் எண். **053/01/3/25–26/0007747**லும் மற்றும் முன் வைப்புத் தொகையாக ரூ. **1,00,000/–**ம் சலான் எண். **053/01/3/25–26/0007748**, நாள் **26.11.2025–**இலும் செலுத்தி) ரசீது சமர்ப்பித்துள்ளார். மேற்படி மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடு மற்றும் மனைப்பிரிவு சாலை ஆகியவற்றினை தானப்பத்திர ஆவண எண். **4256/2025**, நாள் **04.07.2025–**இன்படி சாலைகளின் பரப்பளவு **274.05** சதுர மீட்டர் இடமும், பொது உபயோகத்திற்காக **12.75** சதுர மீட்டர் இடமும் மற்றும் **10%** பொது ஒதுக்கீடு பொது உபயோக இடமாக இந்நகராட்சிக்கு **100.62** சதுர மீட்டர் இடமும் ஆணையாளர், இராசிபுரம் நகராட்சி பெயரில் தானமாக பதிவு செய்து, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்கள் மூலம் நகராட்சியில் சமர்ப்பித்துள்ளதை பின்னேற்பு ஒப்புதல் பெறுவதற்கும், மேற்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அரசாணை (நிலை) எண். **181** வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் **09.12.2020** மற்றும் நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண். **12843/22/**டிபி**2** நாள் **20.10.2022** சுற்றறிக்கையின்படியும், மேற்க்கண்ட தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவிலுள்ள சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை தானப்பத்திரத்தின்படி தானமாக ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களை விதிமுறைகளுக்குட்பட்டு இந்நகராட்சி பராமரிப்பிற்கு ஏற்க, தானமாக பத்திரப்பதிவு செய்ததை இம்மன்றம் பின்னேற்பு ஒப்புதல் வழங்கலாம் மற்றும் மேற்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.

**(5079/23/எப்1)**

**தீர்மானம் எண். 794**

ஒப்புதல் வழங்கப்படுகிறது.

**(26)** நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். **24431/2024/**ததொபி நாள் **23.08.2024** மற்றும் நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் கடித ந.க.எண். **3071/2023/**டி**2**, நாள் **22.07.2025–**இன்படி இராசிபுரம் நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு MS office மற்றும் Ms Excell Advanced ஆகிய கணினி பயிற்சி வழங்கும் பணிக்கு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதியின்படி கடந்த **28.07.2025–**ஆம் தேதியில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளை கீழ்க்கண்ட விவரப்படி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ஒரு நபருக்கு** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **விலைப்புள்ளி தொகை ஒரு நபருக்கு** |
|---|---|---|---|---|
| 1 | இராசிபுரம் நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு MS office மற்றும் Ms Excell | ரூ. 1500 + GST | M/s. Senthur Murugan Info tech | ரூ. 1750 + GST |
| | | | M/s. Sri Sai Venkadeswara Education Charitable | ரூ. 1500 + GST |

| | | | | |
|---|---|---|---|---|
| | Advanced போன்ற கணினி பயிற்சி வழங்கும் பணி (3 நாட்கள்) | | Trust, Thuraiyur | |
| | | | M/s. Vanchi Info tech, Trichy | ரூ. 1690 + GST |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. Sri Sai Venkadeswara Education Charitable Trust, Thuraiyur அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

3) மேற்காணும் பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2000/25/சி1)

**தீர்மானம் எண். 795**

ஒப்புதல் வழங்கப்படுகிறது.

(27) இராசிபுரம் நகராட்சி அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் ஆழ்துளை குழாய் கிணற்றின் 5 HP மின்மோட்டார் தற்போது இரு நாட்களாக பழுதடைந்துள்ளது. இந்த ஆழ்துளை கிணற்றின் மூலம் அம்மா உணவகம், பாரதிதாசன் சாலை பள்ளி வளாகம் மற்றும் காலை உணவுத்திட்டம், நகராட்சி அலுவலகம் ஆகியவற்றிற்கு தினசரி தண்ணீர் தேவை நிறைவேற்றப்படுகிறது. எனவே உடனடியாக இப்பணி செய்யப்பட வேண்டி உள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி உட்பிரிவு விதிகளின்படி Section 57(7) நகர் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கும், ஒப்பந்ததாரர் திரு ஆர்.எஸ். ரங்கசாமி மூலம் பணி மேற்கொண்டமைக்கான செலவினத் தொகை ரூ. 25,250/- வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்டத் தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(1704/25/இ2)

**தீர்மானம் எண். 796**

அனுமதிக்கப்படுகிறது.

(28) இராசிபுரம் நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு MS office and MS Excell Advance கணினி பயிற்சி வழங்க நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் அறிவுறுத்தலின்படி ஸ்ரீ சாய் வெங்கடேஸ்வரா எஜிகேஷனல் சேரிடபுள் டிரஸ்ட், துறையூர் என்ற நிறுவனத்தின் மூலம் திருச்செங்கோடு நகராட்சியில் பயிற்சி வழங்கப்பட்டமைக்கு, அதற்குரிய கட்டணம் ரூ. 12390/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(2000/25/சி1)**

**தீர்மானம் எண். 797**

அனுமதிக்கப்படுகிறது.

**( 29 )** இராசிபுரம் நகராட்சியிலிருந்து அணைப்பாளையத்தில் புதியதாக பேருந்து நிலையம் கட்டுவதற்கு, மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண்.W.P.No . 39839/2024, நாள் 06.02.2025 மற்றும் வழக்கு எண்.W.P.No. 38971/2024, நாள் 06.03.2025 தீர்ப்புகளின்படி நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களால் விசாரணை செய்து உத்தரவிடப்பட்ட செயல்முறை ஆணை ந.க.எண். 4830/2025/L2, நாள் 25.08.2025 உத்திரவை இரத்து செய்யக்கோரி தலைவர், இராசிபுரம் தாலுகா பேருந்து உரிமையாளர் சங்கத்தின் மூலம் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் இந்நகராட்சி ஆணையாளர் அவர்களை 2-ஆவது பிரதிவாதியாகவும் மற்றும் தலைவர், இராசிபுரம் நகராட்சி அவர்களை 3-ஆம் பிரதிவாதியாகவும் சேர்த்து வழக்குஎண். W.P.No. 41551/2025-ல் வழக்கு தொடர்ந்துள்ளார்கள்.

மேற்கண்ட வழக்கிற்கு இந்நகராட்சி மற்றும் நகர்மன்றம் சார்பாக அரசு சிறப்பு வழக்கறிஞர் திருT.சீனிவாசன் அட்வகேட் அவர்களை நியமனம் செய்வதற்கும் அதற்கு ஆகும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(1890/24/எப்1)

**தீர்மானம் எண். 798**

அனுமதிக்கப்படுகிறது.

**( 30 )** இராசிபுரம் நகராட்சிக்கு அணைப்பாளையம் கிராமத்தில் சர்வே எண். **41/1**B2, 117/1A2, 115/4B, 115/5, 116/1, 116/3, 116/4, 116/5B1, 118/5B,116/2 மற்றும் 41/1F2-இல் **7.03** ஏக்கர் இடத்தில் புதியதாக பேருந்து நிலையம் இந்நகராட்சி மூலம் கட்டுவதற்கு ஆட்சேபனை செய்து திரு பி.அருள் என்பவரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண். W.P.NO. 39839/2024 மற்றும் W.M.P.NO.43172/2024-இல் வழக்கு தொடர்ந்ததற்கு நகராட்சி சார்பாக ஆஜராகி வாதாடிய அரசு சிறப்பு வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம் திரு எஸ். ராஜேஸ் அவர்களை நியமனம் செய்ததற்கும் மற்றும் அதற்கு ஆகும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மேற்கண்ட செலவினங்களை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்கண்ட வழக்கறிஞரை நியமனம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(1890/2024/எப்1)**

**தீர்மானம் எண். 799**

அனுமதிக்கப்படுகிறது.

( 31 ) இராசிபுரம் நகராட்சிக்கு அணைப்பாளையம் கிராமத்தில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க ஆட்சேபனை தெரிவித்து திரு வேம்புசேகர் என்பவரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண். W.P.NO. 7026/**2025**–இல் வழக்கு தொடர்ந்ததற்கு நகராட்சி சார்பாக ஆஜராக சென்னை உயர்நீதிமன்றம், அரசு வழக்கறிஞரை நியமனம் செய்ததற்கும் மற்றும் அதற்கான செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

மேற்கண்ட செலவினங்களை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்கண்ட வழக்கறிஞரை நியமனம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(**1890**/2024/எப்**1**)

**தீர்மானம் எண். 800**

அனுமதிக்கப்படுகிறது.

( 32) இராசிபுரம் நகராட்சியிலிருந்து அணைப்பாளையத்தில் புதியதாக பேருந்து நிலையம் கட்டுவதற்கு, மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண்.W.P.No. 39839/2024, நாள் 06.02.2025 மற்றும் வழக்கு எண்.W.P.No. 38971/2024, நாள் 06.03.2025 தீர்ப்புகளின்படி நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களால் விசாரணை செய்து உத்தரவிடப்பட்ட செயல்முறை ஆணை ந.க.எண். 4830/2025/L2, நாள் 25.08.2025 உத்திரவை இரத்து செய்யக்கோரி தலைவர், இராசிபுரம் தாலுகா பேருந்து உரிமையாளர் சங்கத்தின் மூலம் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் இந்நகராட்சி ஆணையாளர் அவர்களை 2-ஆவது பிரதிவாதியாகவும் மற்றும் தலைவர், இராசிபுரம் நகராட்சி அவர்களை 3-ம் பிரதிவாதியாகவும் சேர்த்து வழக்கு எண். W.P.No. 46452/2025 மற்றும் W.P.No. 46562/2025-இல் வழக்கு தொடர்ந்துள்ளார்கள்.

மேற்கண்ட வழக்கிற்கு இந்நகராட்சி மற்றும் நகர்மன்றம் சார்பாக அரசு சிறப்பு வழக்கறிஞர் திரு T.சீனிவாசன், அட்வகேட் அவர்களை நியமனம் செய்வதற்கும் அதற்கு ஆகும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(1890/24/எப்1)

**தீர்மானம் எண். 801**

அனுமதிக்கப்பட்டது.

ஒம்/– முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி..

**இராசிபுரம் நகராட்சியின் 05.12.2025–ஆம் தேதியன்று நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கையின் தீர்மானம் எண். 777–இன் உண்மை நகல்.**

---

இராசிபுரம் நகராட்சி பொதுப்பிரிவிற்குத் தேவையான பதிவேடுகள், வருவாய் பிரிவிற்கு பெயர் மாற்றம் பதிவேடு, படிவங்கள், காசாளர் பிரிவிற்கு படிவங்கள், சொத்துவரி, குடிநீர் கட்டண இரசீதுகள், பொறியியல் பிரிவிற்கு அளவு புத்தகம் மற்றும் பதிவேடுகள், பொது சுகாதாரப் பிரிவிற்கான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் மற்றும் அனைத்துப் பிரிவிற்கும் A4, FS பேப்பர் மற்றும் எழுதுபொருட்கள் ஆகியன 2025–26–ற்கு வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 09.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்காணும் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(2880/25/பி3)

**தீர்மானம் எண். 777**

அனுமதிக்கப்படுகிறது.

ஒம்/– முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.